# எஸ்.தென்னரசு – வெற்றிக்கதை



குடும்பத்தைப் பற்றி: இவர் ஒரு சிறு விவசாயி. சுமார் 8 ஏக்கர் நிலத்தில் 1 ஏக்கர் கத்திரி, 0.5 ஏக்கர் மிளகாய், 0.5 ஏக்கர் வெண்டை பயிரிட்டுள்ளார். மீதி 6 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ளார்.

தினசரி சந்தை நிலவரத்தை பற்றி இவரின் கருத்து:

தினசரி சந்தை நிலவரம் எனும் இந்த திட்டம் எங்களை போன்ற விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ள ஒரு நல்ல திட்டம். விவசாயிகள் மட்டுமள்ளாமல் வியாபாரிகள் மற்றும் நுகர் வோர்களுக்கும் பயனுள்ள திட்டமாக அமைந்துள்ளது.

இத்திட்டத்தினால் தினமும் நான் அறுவடை செய்யும் கத்திரியின் விலை நிலவரத்தினை செல் மூலம் தெரிந்து கொண்டு சரியான விலைக்கு இடைத்தரகர் இல்லாமல் நேரடியாக வியாபாரிகளிடம் விற்பனை செய்கிறேன். இதனால் நல்ல இலாபமும் கிடைக்கிறது.

செல்போன் மூலம் இரு சந்தை நிலவரங்களை மட்டுமே அறிய முடிகிறது. இதனால் மற்ற சந்தை நிலவரங்களை அறிய முடியவில்லை கிராம புறஙக்களில் இணையதள வசதி அதைப் பற்றிய அறிவு குறைவாக உள்ள விவசாயிகளுக்கு FM எனும் வானொலி மூலமாக அனைத்து சந்தை நிலவரங்களையும் ஒலிபரப்பினால் விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

எஸ். தென்னரசு,

எம். ஏரிப்பாளையம்,பண்ருட்டி வட்டம்,
கடலூர் மாவட்டம்

கைபேசி எண்: 9791650294